# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 88/35 — 1973 දෙසැම්බර් 01 වැනි සෙනසුරාදා — 1973.12.01

88/35 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1973 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்கு விதிகள்

#### 68 (1) ஆம் ஒழுங்குவிதியின் கீழான கட்டளை

**1973 ஆம் ஆண்டின்** 12 **ஆம்** இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) **ஒழுங்கு விதிகளின் 68 ஆம் ஒழுங்குவிதியின்** (1) ஆம் பந்தியினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு முதலமைச்சர் சிறிமாவோ ரத்வத்தே டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், இதற்குள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிறுவனத்தைப் பொறுத்தவரை, பொதுமக்களின் பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதிக்கு அல்லது அத்தியாவசிய சேவைகளைப் பேணல், என்பனவற்றிற்குப் பாதகமான நோக்கங்களுக்காக, அல்லது அவ்வொழுங்கு விதிகளின் 24 ஆம் ஒழுங்குவிதியின் (அ) விலிருந்து (எ) வரையுள்ள பந்திகளில் அல்லது 38 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் உட்பந்திகள் (அ), (ஆ) வில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக, அத்தகைய நிறுவனங்களால் அல்லது அந்நிறுவனங்களை அல்லது அதன் உறுப்பினர்களை அல்லது ஆதரவாளர்களை உபயோகித்து நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய ஆபத்து இருக்கின்றது என நான் திருப்திப்படுவதால், இக்கட்டளையினால், அத்தகைய நிறுவனம் தடை செய்யப்பட்ட நிறுவனமென வெளிப்படுத்துகின்றேன்.

சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்க,
*முதலமைச்சர்.*

கொழும்பு,
1973, *திசெம்பர்* 1.

**அட்டவணை**

பொதுவாக ஜனதா விமுக்தி பெரமுன என அழைக்கப்படும் நிறுவனம்.


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*